செ.வெ.எண்.27 நாள்: 10.01.2022

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் மாண்புமிகு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் / மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு தலைவர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் இன்று (10.01.2022) மாண்புமிகு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் / மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு தலைவர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பெ.கீதாஜீவன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர் - செயலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

கூட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம், பிரதம மந்திரி கிராம சடக் யோஜனர், தூய்மை பாரத இயக்கம் ஆகிய பணிகளின் முன்னேற்றம் மற்றும் செயல்பாடுகள் முன்னேற்ற விபரங்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டன. மேலும் Members Parliament Local Area Development Scheme(MPLADS), Jal Jeevan Mission (JJM) – செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. தீன்தயாள் அந்தியோதயா யோஜனா, தீன்தயாள் உபத்யாய கிராமின் கவுசல்யா யோஜனா, தூய்மை பாரத இயக்கம், Smart Cities Mission திட்டம் செயல்பாடு, தேசிய பாதுகாப்பு திட்டம், தேசிய ஊரக குடிநீர் திட்டம், Rashtriya Krishi Vikas Yojana செயல்பாடு, ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டம் மற்றும் PMKSY செயல்பாடு, பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம், நில அளவை ஆவணங்கள் கணினிமயமாக்குதல் செயல்பாடு, தேசிய சுகாதாரத் திட்டம், தீன்தயாள் உபத்யாய கிராம் ஜோதி யோஜனா, Integrated Power Development Scheme செயல்பாடு, சர்வ சிக்ஷ அபியான் செயல்பாடு, Degital India – Pubic Internet Access Programme – Providing Common Service Centre in each Gram Panchayat செயல்பாடு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் செயல்பாடு, மதிய உணவுத் திட்டம், Prime Minister’s Employment Generation Programme, Pradhan Mantri Khnij Kshetra Kalyajn Yojana, Paramparagat Krishi Vikas Yojana, Pradhan Mantri Adarsh Gram Yojana, பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா, Mational Food Security Act, Infrastructure related

programmes like Telecom, Railways, Highways, Waterways. Mines, etc., National Highways Authoriey of India ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாண்புமிகு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் / மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு தலைவர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் தெரிவித்ததாவது:

மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடத்துவதன் நோக்கம் அரசின் திட்டங்கள் அனைவருக்கும் முறையாக கிடைப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும், அதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் வாய்ப்பாக உள்ளது. ஆய்வுக் கூட்டத்திற்கு வரும் அலுவலர்கள் தங்கள் துறை சார்ந்த பணிகள் எந்த அளவிற்கு முடிக்கப்பட்டுள்ளது. நிலுவை பணிகளை எப்படி விரைவாக முடிப்பது என்பதை அறிந்து அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அரசின் நோக்கங்களை அறிந்து திட்டங்களை செயல்படுத்த முடியும். மக்களுக்கான திட்ட பணிகளை விரைந்து செய்து முடிப்பதற்கு அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என தெரிவித்தார்.

ஆய்வுக்கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலகில் வருவாய்த்துறையில் பணிபுரிந்து பணியிடையில் காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 3 பேருக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் மாண்புமிகு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் / மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு தலைவர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் வழங்கினார்கள்.

கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜி.வி.மார்க்கண்டேயன் (விளாத்திகுளம்) அவர்கள், திரு.எம்.சி.சண்முகையா (ஓட்டப்பிடாரம்) அவர்கள், கூடுதல் ஆட்சியர் / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கண்ணபிரான் அவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.